மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இரண்டாம் தவணைப் பரீட்சை – 2023
நாடகமும் அரங்கியலும்

தரம் -11 நேரம் : 3 மணி

## பகுதி I

01. நாடகத்தின் மூலக்கூறுகளில் மிகவும் பிரதானமானதாக அமைவது.
(1) எழுத்துரு (2) நடிப்பு (3) வேட உடை (4) காட்சி விதானிப்பு.

02. தொழில்நுட்பத்துடன் தொடர்புடையதும் கேட்போரின் மனதை அரங்காக கொண்டதுமான வடிவம்.
(1) தொலைக்காட்சி நாடகம் (2) சினிமா
(3) மேடை நாடகம் (4) வானொலி நாடகம்

03. ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டாக கொள்ளத்தக்கது
(1) கோழி கோட்டான் (2) ஆடும் வீடும் (3) குருட்டு ஆட்டோ (4) பஸ்

04. பின்வருவனவற்றுள் சிறுவர் நாடகப் பாடல்.
(1) சின்னச் சின்ன குருவிகள் (2) மனிதர்கள் உயிர்க்க வேண்டும்
(3) பண்புதான் எங்கள் செல்வம் (4) என்னடி உந்தன் கோப்பியில்

05. குரல் வழிச்சித்திரிப்பின் போது கவனிக்கப்பட வேண்டியவை.
(1) மெய்நிலைகள் - அசைவுகள் (2) வீச்சு – புறத்தெறிகை
(3) உடல்தளர்வு லாவகம் (4) மெய்யசைவு – லலிதம்.

06. பாத்திரம் ஒன்றின் சமூகவியல் பண்புகளுள் அடங்குபவை.
(1) பால், வயது உயரம் (2) மனநிலை, நடத்தைகள், பழக்கவழக்கங்கள்
(3) தொழில், அந்தஸ்து, சமயம் (4) பருமன், விருப்பு வெறுப்புக்கள் பருமன்.

07. ஆற்றுகைக் கலைகள் தொடர்பான கூற்றுக்களில் பொருத்தமற்றது.
(1) ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்பைக் கொண்டது.
(2) பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்துவது.
(3) கணப்பிரசன்னமானது.
(4) படைப்பிலிருந்து படைப்பாளியை பிரித்து நோக்கவல்லது.

08. நடிகரின் இயற்கையான சாரீர வளத்திலும் இசை ஞானத்திலும் பெரிதும் தங்கியுள்ள கலைவடிவம்.
(1) பார்ஸி வழி அரங்கு (2) பலே (3) ஊம நாடகம் (4) நவீன நாடகம்

09. நியமமில் அரங்கில் நடிகர் தெரிவிற்கப் பெரிதும் பயன்படுத்தப்பெறும் நுட்பங்கள் ஒன்று
(1) திறந்த தெரிவு (2) மூடிய தெரிவு (3) புதிதளித்தல் (4) சல்லடைத்தெரிவு

10. நாடக ஆற்றுகையின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதில் பெரிதும் பங்கெடுப்போர்.
(1) நெறியாளர் (2) பார்ப்போர் (3) தயாரிப்பாளர் (4) நாடகாசிரியர்

11. சுற்றிவரப் பார்ப்போரைக் கொண்ட பாரம்பரிய அரங்க வெளி.
(1) கிரேக்கப் பேரரங்கு (2) கரலிய அரங்கு
(3) தெருக்கூத்து அரங்கு (4) வட்டகாளரி அரங்கு

12. கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்கு.
(1) சூரன் போர் (2) குளிர்தி (3) வேட்டைத் திருவிழா (4) மானம்பூ

13. அண்ணமார் வழிபாட்டுடன் தொடர்புடையதும் குழந்தைவரம் வேண்டி ஆடப்படுவதுமான தமிழ்க் கூத்து வடிவம்.
(1) ரட்டயகும (2) சொக்கற (3) பொன்னர் சங்கர் (4) காமன் கூத்து

14. “கந்தார்த்தம்” எனும் பாடல் மெட்டு அதிக முக்கியத்துவம் பெறும் கூத்து மரபு.
(1) வடபாங்கு (2) தென்பாங்கு (3) வடமோடி (4) வசந்தன்

15. கட்டிளமைப் பருவத்து மாணவரின் மனவெழுச்சிப் பிரச்சினையை கதைப்பொருளாகக் கொண்ட நாடகம்.
(1) புதியதொரு வீடு (2) எந்தையும் தாயும் (3) இராவணேசன் (4) ஆரொடு நோகேன்.

16. வடபாங்கு கூத்துக்களில் பெரும்பாலும் கதைச்சுருக்கத்தினை அறிமுகம் செய்யும் பாத்திரம்.
(1) கட்டியக்காரன் (2) பபூன் (3) பலசந்தோர் (4) கோமாளி

17. மூப்பன் எனும் பாத்திரம் இடம் பெறும் கூத்து
(1) வசந்தன் கூத்து (2) மகிடிக் கூத்து
(3) காமன் கூத்து (4) பறைமேளக் கூத்து

18. சோக உணர்வினைத் தோற்றுவிப்பதற்கு மிகப்பொருத்தமான இசைக்கருவி.
(1) மிருதங்கம் (2) உடுக்கு (3) சல்லாரி (4) வயலின்

19. மேடைவெளி முழுமையையும் அரங்கப் பின்னணியையும் ஒளியூட்டுவதற்கு பயன்படுத்தப்பெறும் பொருத்தமான ஒளியூட்டல் சாதனம்.
(1) பெருக்கொளி (2) பொட்டொளி (3) வர்ணச்சில்லு (4) மங்கலாக்கி

20. பின்வருவனவற்றுள் மலையகக் கூத்து அல்லாதது.
(1) காமன் கூத்து (2) அர்ச்சுனன் தபசு
(3) நாட்டைக் கூத்து (4) பொன்னர் சங்கர்

21. களத்துமேடு எனும் அரங்க வெளியில் ஆடப்படும் ஆற்றுகை வடிவம்.
(1) கூத்து (2) கோலம் (3) சொக்கரி (4) நாடகம்

22. நாடக எழுத்துரு ஒன்றை நாடகமாக மாற்றுபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்
(1) முகாமையாளர் (2) தயாரிப்பாளர் (3) நெறியாளர் (4) பார்ப்போர்.

23. “என்னடி உந்தன் கோப்பியில் ஒரு சிறுதுளி… எனும் பாடல்.
(1) கிராமிய பாடல் (2) சிறுவர் பாடல்
(3) நவீன நாடகப் பாடல் (4) த. கலாமணி.

24. “ஈழத்து இசை நாடக வரலாறு” எனும் அரங்கியல் ஆய்வு நூலை எழுதியவர்
(1) காரை செ. சுந்தரம்பிள்ளை (2) அராலியூர் சுந்தரம்பிள்ளை
(3) சங்கரதாஸ் சுவாமிகள் (4) த. கலாமணி

25. காமன் கூத்தில் பயன்படுத்தப்படும் பிரதான வாத்தியம்
(1) மத்தளம் (2) மிருதங்கம் (3) தப்பு (4) பறை

26. கூத்தின் வடிவத்திற்குள் புதிய உள்ளடக்கத்தைப் புகுத்தித் தயாரிக்கப்பட்ட நாடகம்.
(1) உத்தமன் பரதன் (2) சிங்காரம்
(3) செஞ்சோற்றுக் கடன் (4) பாலன் பிறந்தான்.

27. உடல் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு.
(1) குருட்டு ஆட்டோ (2) ஆடும் வீடும்
(3) கோழி கோட்டான் (4) சின்னப்பானை பெரியபானை.

28. பின்வருவனவற்றுள் வேடமுகம் பயன்படுத்தப்படாத சிங்கள நாடக மரபு
(1) கோவம் (2) சொக்கரி (3) தொவில் (4) தூர்த்தி

29. நாடக நெறியாளரின் பிரதான பணி.
(1) அரங்க, வெளியை தெரிவு செய்தல்
(2) நாடகத்தை முகாமை செய்தல்
(3) நடிகரைத் தெரிவுசெய்தலும் நடிபாகமளித்தலும்
(4) மேடையை நிர்வாகம் செய்தல்.

30. நாடகத்தின் இறுதி, ஒன்திகை எவ்வாறு அழைக்கப்படும்.
(1) தொழில்நுட்ப ஒத்திகை (2) வாசிப்பு ஒத்திகை
(3) உடை ஒத்திகை (4) செயல் ஒத்திகை

31. பரதமுனிவர் கூறும் பிரதான ரசங்கள் எத்தனை
(1) ஏழு (2) எட்டு (3) ஒன்பது (4) பத்து

32. “ஆரொடு நோகேன்’ நாடகம் ஒரு
(1) பாடசாலை நாடகம் (2) சிறுவர் நாடகம்
(3) கவிதை நாடகம் (4) அரசியல் நாடகம்

33. “உடக்குப்பாஸ்” எனும் நாடகநிலைச் சடங்கு மன்னாரில் பெரும்பாலும் ஆடப்படும் பிரதேசம் எது.
(1) வங்காலை (2) முருங்கன் (3) நானாட்டான் (4) பேசாலை.

34. “புதியதொருவீடு” நாடகத்தின் பிரதான மோடி

(1) யதார்த்த மோரி
(2) அபத்த மோடி
(3) யதார்த்த விரோத மோடி
(4) கற்பித மோடி

35. புதியதொரு வீடு நாடகத்தில் இடம் பெறும் பிரதான மோதுகை யாது?

(1) இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்குமிடையிலான பிரச்சினை
(2) வேலையில்லாதோருக்கும் அரசுக்குமிடையிலான போராட்டம்.
(3) இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான போராட்டம்.
(4) தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையிலான போராட்டம்.

❖ **பின்வரும் படங்களை அவதானித்து 36-40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**



(அ)



(ஆ)



(இ)



(ஈ)



(உ)

36. புதியதொருவீடு நாடகத்தை எழுதியவர்

(1) அ
(2) இ
(3) ஈ
(4) ஆ

37. ஆரொடு நோகேன் எனும் நாடகத்தை எழுதியவர்
(1) ஆ (2) உ (3) அ (4) இ

38. படம் 'ஈ' குறிப்பது எதை?
(1) பரப்பொளி (2) வர்ணச் சக்கரம் (3) கீற்றொளி (4) பொட்டொளி

39. படம் ''அ' குறிக்கும் நாடக ஆசிரியர் எழுதிய நாடகம் பின்வருவனவற்றுள் யாது.
(1) தப்பி வந்த தாடி ஆடு (2) பஞ்சவர்ண நரியார்
(3) ஒற்றுமையின் சின்னம் (4) கூடி விளையாடு பாப்பா.

40. படம் ''உ'' குறிப்பது யாது?
(1) சமூக நாடகம் (2) சிறுவர் நாடகம்
(3) இலக்கிய நாடகம் (4) இசை நாடகம்.

(40 x1 = 40 புள்ளிகள்)

## நாடகமும் அரங்கியலும் II

### முதலாவது வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.
i. கோலம் ஆற்றுகை நிகழ்த்தப்படும் அரங்க வெளியின் பெயர் யாது? (01 புள்ளி)
ii. கூத்தினை நெறிப்படுத்துபவர் எப்பெயரால் அழைக்கப்படுவார்? (01 புள்ளி)
iii. ஊமச் செயற்பாட்டின் போது அதிகளவில் வெளிப்படுத்தப்படும் சித்திரிப்பு யாது?(01 புள்ளி)
iv. திரௌபதி அம்மன் சடங்குடன் தொடர்புடைய மலையகக் கூத்து ஒன்றின் பெயர் தருக? (01 புள்ளி)
v. ''நாமிருக்கும் நாடு நமது'' எனும் நாடகத்தின் ஆசிரியா யார்? (01 புள்ளி)
vi. நடிகமணி வீ.வீ வைரமுத்து உருவாக்கிய நாடக சபையின் பெயர் என்ன? (01 புள்ளி
vii. குளுர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படுவதன் நோக்கம் யாது? (01 புள்ளி)
viii. ''தப்பு' இசைக்கருவி பிரதானமாகப் பயன்படுத்தப்படும் கூத்து மரபு யாது? (01 புள்ளி)
ix. 'பூனைகளின் இராச்சியம்', தேவலோக யானை ஆகிய நாடகங்களை எழுதியோர் யாவர்? (02 புள்ளி)
x. வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்திற்கும் இடையே காணப்படும் பிரதான வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக? (02 புள்ளி)

02. i. ஆற்றுகைக் கலைகளின் பிரதான பண்புகள் நான்கு தருக. (04 புள்ளி)

ii. நாடகக் கலையிலிருந்து பின்வருவன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை தனித்தனியே சுருக்கமாக விளக்குக.

(அ) இசை
(ஆ) நடனம்
(இ) தொலைக்காட்சி நாடகம்
(ஈ) சினிமா (08 புள்ளி)

03. i. பின்வரும் கூற்றுக்கள் பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

(அ) காமன் கூத்து
(ஆ) காத்தவராயன் கூத்து
(இ) வசந்தன் கூத்து
(ஈ) தென்பாங்கு

(04 புள்ளி)

ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூத்துக்களில் எவையேனும் இரண்டின் ஆற்றுகை மரபுகளை விளக்குக. (08 புள்ளி)

04. i. நாடகத் தயாரிப்பு என்றால் என்ன? (02 புள்ளி)

ii. நாடகத் தயாரிப்பாளரின் பணிகள் நான்கு தருக? (04 புள்ளி)

iii. நாடகத் தயாரிப்பாளர் தனது பணிகளைத் திறம்படச் செய்வதற்காக அவரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக? (06 புள்ளி)

05. i. உமது பிதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்காற்றுகைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(03 புள்ளி)

ii. மேற்குறிப்பிட்டவற்றுள் யாதாயினும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அம்சங்களை தெளிவுபடுத்துக.

(அ) நிகழ்த்துகை முறை.
(ஆ) அரங்க வெளி
(இ) ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம் (09 புள்ளி)

06. i. மகாகவி. து. உருத்திரமூர்த்தியின் புதியதொரு வீடு நாடகத்தின் பிரதான கதைக்கரு யாது? (02 புள்ளி)

ii. இந்நாடகத்தில் இடம்பெறும் பெண் பாத்திரங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றின் குணாதிசயங்கள் பற்றி சுருக்கமாக விபரிக்குக? (06 புள்ளி)

iii. இந்நாடகத்தில் உம்மைக் அதிகம் கவர்ந்த பாத்திரம் ஒன்றைக் குறிப்பிட்டு அப்பாத்திரம் உம்மைக் கவர்ந்தமைக்கான காரணங்களை விளக்குக. (04 புள்ளி)

07. பின்வருவனவற்றுள் யாதாயினும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. நெறியாளர்
ii. தயாரிப்பாளர்
iii. மேடை முகாமையாளர்
iv. நடிகன்
v. இசை விதானிப்பாளர். (3x4 = 12 புளளிகள்)